P.Dhandayudhapani

தமிழ்நாடு அரசு மேல்நிலை முதலாம் ஆண்டு வேதியியல்

அலகு 14 ஹேலோ ஆல்கேன்கள் மற்றும் ஹேலோ அரீன்கள்

சரியான விடையினைத் தேர்வு செய்க

1.  ன் IUPAC பெயர்

   அ) 2-புரோமோ பென்ட் – 3 – ஈன்

   ஆ) 4-புரோமோ பென்ட் – 2 – ஈன்

   இ) 2-புரோமோ பென்ட்– 4 – ஈன்

   ஈ) 4-புரோமோ பென்ட்– 1 – ஈன்

2. பின்வரும் சேர்மங்களில், அதிக கொதிநிலை உடைய சேர்மம் எது?

   அ) n-பியூட்டைல் குளோரைடு

   ஆ) ஐசோ பியூட்டைல் குளோரைடு

   இ) t-பியூட்டைல் குளோரைடு

   ஈ) n-புரப்பைல் குளோரைடு.

3. பின்வரும் சேர்மங்களை அவற்றின் அடர்த்தியின் ஏறுவரிசையில் அமைக்க

   A) CCl_4
   B) $CHCl_3$
   C) CH_2Cl_2
   D) CH_3Cl

   அ) $D < C < B < A$

   ஆ) $C > B > A > D$

   இ) $A < B < C < D$

   ஈ) $C > A > B > D$

4. -Clன் இட அமைவினைப் பொருத்து CH3 – CH = CH – CH2 – Cl, சேர்மமானது பின்வருமாறு வகைப்படுத்தப்படுகிறது

அ) வினைல் ஆ) அல்லைல்

இ) ஈரிணைய ஈ) அர்அல்கைல்

5. டை எத்தில் குளோரோ மீத்தேனின் சரியான IUPAC பெயர்

அ) 3 – குளோரோ பென்டேன்

ஆ) 1-குளோரோ பென்டேன்

இ) 1-குளோரோ-1, 1, டை எத்தில் மீத்தேன்

ஈ) 1 –குளோரோ-1-எத்தில் புரப்பேன்.

6. C-X பிணைப்பானது இவற்றில் வலிமையாக உள்ளது

அ) குளோரோ மீத்தேன்

ஆ) அயடோ மீத்தேன்

இ) புரோமோ மீத்தேன்

ஈ) புளூரோ மீத்தேன்

7. 

என்ற வினையில் X என்பது

அ) ஆ)

இ) 

ஈ) 

8. பின்வரும் சேர்மங்களுள் எச்சேர்மமானது OH^- அயனியால் கருக்கவர்பொருள் பதிலீட்டு வினைக்கு உட்படும் போது சுழிமாய்க் கலவையைத் தரும்,

i) 

ii) 

iii) 

அ) (i)   ஆ) (ii) and (iii)   இ) (iii)   ஈ) (i) and (ii)

9. எத்தில் பார்மேட்டை அதிகளவு RMgX உடன் வினைப்படுத்தும் போது பெறப்படுவது

அ) $R-\underset{\underset{O}{\|}}{C}-R$ ஆ) $R\ \underset{\underset{OH}{|}}{CH}\ R$

இ) R- CHO   ஈ) R- O – R

10. பென்சீன் $FeCl_3$ முன்னிலையில் Cl_2 உடன் சூரிய ஒளி இல்லாத நிலையில் வினைபட்டு தருவது

அ) குளோரோ பென்சீன்

ஆ) பென்சைல் குளோரைடு

இ) பென்சால் குளோரைடு

ஈ) பென்சீன் ஹெக்ஸா குளோரைடு

11. $C_2F_4Cl_2$ ன் பெயர் ___________

a) ஃப்ரியான் – 112

ஆ) ஃப்ரியான் – 113

இ) ஃப்ரியான் – 114

ஈ) ஃப்ரியான் – 115

12. எத்திலீன் டை குளோரைடை எத்திலிடீன் டை குளோரைடிலிருந்து வேறுபடுத்தி அறிய உதவுவது எது?

அ) Zn / மெத்தனால்

ஆ) KOH / எத்தனால்

இ) நீர்த்த KOH

ஈ) $ZnCl_2$ / அடர் HCl

13. நிரல் I ல் தரப்பட்டுள்ள சேர்மங்களை நிரல் II ல் கொடுக்கப்பட்டுள்ள அதன் பயன்களுடன் பொருத்துக

	நிரல்-I (சேர்மங்கள்)		நிரல்-II (பயன்கள்)
A	அயடோபார்ம்	1	தீயணைப்பான்
B	கார்பன் டெட்ரா குளோரைடு	2	பூச்சிக்கொல்லி
C	CFC	3	புரைதடுப்பான்
D	DDT	4	குளிர் சாதனப் பெட்டி

Code

அ) A → 2 B → 4 C → 1 D → 3

ஆ) A → 3 B → 2 C → 4 D → 1

இ) A → 1B → 2 C → 3 D → 4

ஈ) A → 3 B → 1 C → 4 D → 2

14. **கூற்று: மோனோ ஹேலோ அரீன்களில், எலக்ட்ரான் கவர்பொருள் பதிலீட்டு வினைo- மற்றும் p- இடங்களில் நிகழ்கிறது.**

காரணம்: ஹாலஜன்அணுவானது வளைய கிளர்வு நீக்கி

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. மேலும் காரணமானது கூற்றிற்கு சரியானவிளக்கமாகும்.

ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணமானது கூற்றிற்கு சரியானவிளக்கம் அல்ல.

இ) கூற்று சரி, ஆனால் காரணம் தவறு.

ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

15. **பின்வரும் வினையைக்கருதுக.**

$CH_3CH_2CH_2Br + NaCN \rightarrow CH_3CH_2CH_2CN + NaBr$

இவ்வினைபின்வரும் எவற்றுள் வேகமாக நிகழும்

அ) எத்தனால் ஆ) மெத்தனால்

இ) DMF (N, N' – டைமெத்தில் பார்மமைடு) ஈ) நீர்.

16. **டெட்ரா குளோரோ மீத்தேனிலிருந்து ஃப்ரீயான்-12 பெருமளவில் எவ்வினையின் மூலம் தயாரிக்கப்படுகிறது**

அ) உர்ட்ஸ் வினை ஆ) ஸ்வார்ட்ஸ் வினை

இ) ஹேலோபார்ம் வினை ஈ) காட்டர்மான்வினை

17. **S_{N1} வினைவழி முறையில் மிகவும் எளிதாக நீராற்பகுப்படையும் மூலக்கூறு**

அ) அல்லைல் குளோரைடு ஆ) எத்தில் குளோரைடு

இ) ஐசோ புரப்பைல் குளோரைடு ஈ) பென்சைல் குளோரைடு

18. **S_{N1} வினையில் மெதுவாக நிகழும் படியில் உருவாகும் கார்பன்நேர் அயனியானது**

அ) Sp_3 இனக்கலப்படைந்தது ஆ) Sp_2 இனக்கலப்படைந்தது

இ) Sp இனக்கலப்படைந்தது ஈ) இவைஎதுவுமில்லை

19. **குளோரோ பென்சீனை HNO_3 ஆல் நைட்ரோ ஏற்றம் அடையச் செய்யும் போது பெருமளவில் உருவாகும் முதன்மைவிளைபொருள்**

அ) 1-குளோரோ-4-நைட்ரோ பென்சீன் ஆ) 1-குளோரோ-2-நைட்ரோ பென்சீன்

இ) 1-குளோரோ-3-நைட்ரோ பென்சீன் ஈ) 1-குளோரோ-1-நைட்ரோ பென்சீன்

20. **பின்வருவனவற்றுள் கருக்கவர் பொருள் பதிலீட்டு வினையில் அதிக வினைபுரிவது எது?**

அ) 

இ)

ஆ)

ஈ)

21. **எத்திலிடீன் குளோரைடை நீர்த்த KOH உடன்வினைப்படுத்தும் போது பெறப்படுவது**

அ) அசிட்டால்டிஹைடு ஆ) எத்திலீன்கிளைக்கால்

இ) பார்மால்டிஹைடு ஈ) கிளையாக்சால்

22. **ராஷ் முறைக்கான மூலப்பொருள்**

அ) குளோரோ பென்சீன் ஆ) பீனால் இ) பென்சீன் ஈ) அனிசோல்

23. **குளோரோஃபார்ம் நைட்ரிக் அமிலத்துடன் வினைபுரிந்து தருவது**

அ) நைட்ரோ டொலுவின் ஆ) நைட்ரோ கிளிசரின்

இ) குளோரோ பிக்ரின் ஈ) குளோரோ பிக்ரிக்அமிலம்

24. அசிட்டோன் $\xrightarrow[\text{ii) } H_2O / H^{-1}]{\text{i) } CH_3MgI}$ X,இங்குX என்பது

அ) 2-புரப்பனால் ஆ) 2-மெத்தில்-2-புரப்பனால்

இ) 1-புரப்பனால் ஈ) அசிட்டோனால்

25. **சில்வர் புரப்பியோனேட்டை கார்பன்டெட்ராகுளோரைடில் உள்ள புரோமினுடன் வினைப்படுத்த பெறப்படுவது**

அ) புரப்பியோனிக்அமிலம் ஆ) குளோரோ ஈத்தேன்

இ) புரோமோ ஈத்தேன் ஈ) குளோரோ புரப்பேன்